***கவனிக்க*** .- *2015.04.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

***கவனிக்க*** .- *இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2014.12.31 ஆந் திகதி வரையான பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1912 - 2015 අප්‍රේල් මස 24 වැනි සිකුරාදා - 2015.04.24

*1912 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 752 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 763 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 764 |


***கவனிக்க*** .- *பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## தென் மாகாண மாகாண சபை

## வெலிகம நகர சபை

வெலிகம நகர சபையின் வெற்றிடமாகியுள்ள கீழ்வரும் பதவிகளுக்காக தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | நூலக உதவியாளர் தரம் III | 1 | 6/2006 iv PL-1-2006 A | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர) |

2. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான நிபந்தனைகள் :-**

(i) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பம் கோரும் திகதிக்கு அண்மிய ஐந்து வருடங்கள் வெலிகம நகர சபை அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் நிரந்தர வதிவிடத்தை கொண்டிருக்க வேண்டும்;

(iii) விண்ணப்பம் கோரும் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்;

(iv) மேலுள்ள பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்;

(v) ஆட்சேர்ப்புச் செய்யும் முறைக்கு இணங்க நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தப்படுவதுடன் அதன் மூலம் பெறப்படும் ஆகக்கூடிய புள்ளிகளின் படி தகுதியானவர் தெரிவு செய்யப்படுவர்;

(vi) விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது இடைப்பட்ட காலத்தில் ஆட்சேர்ப்பு செய்தலை காலம் தாழ்த்துதல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை திருத்தம் செய்தலை அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வெலிகம நகர சபைக்குரியதாகும்;

(vii) இப்போது வெலிகம நகர சபையில் இப்பதவியில் பதில் சேவை/சமயோசிதம்/தற்காலிக அடிப்படையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை நேர்முகப் பரீட்சைக்குழுவுக்குரியதாகும்.

3. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை.-** உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்;

(ii) விதவைகள், அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்துக்கு உரியபடி பங்களிப்புச் செய்ய வேண்டும்;

(iii) ஆட்சேர்ப்பு செய்யப்படுவோர் மூன்று வருட தகுதிகாண் காலத்துக்குட்படுத்தப்படுவர். அக்காலத்தினுள் வேலை, வரவு, நடத்தை திருப்திகரமாக இருக்குமாயின் தகுதிகாண் காலத்தின் இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவார்;

(iv) ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு இணங்க தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும் தென்மாகாண அரச சேவையின் நிதி ஒழுங்குகளுக்கும் மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் வெலிகம நகர சபையினால் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்கி நடப்பதற்கு கடப்பாட்டுக்குரியவராவர்;

(v) நனன்டத்தை மற்றும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட பின்னரான ஒரு மாத காலத்தினுள் அரச மருத்துவர் ஒருவர் மூலம் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் அப்பரிசோதனையில் உடல் ரீதியாக தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்படுமாயின் நியமனம் இரத்துச் செய்யப்படும்;

(vi) தண்டனைச் சட்ட கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருக்கக் கூடாது.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி ஏ4 அளவான தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2015.04.30 ஆந் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக செயலாளர்/தலைவர், வெலிகம நகர சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலின் போது காணாமல் போகின்ற அல்லது முகவரி பிழையாக எழுதப்படுவதனால் மீண்டும் திருப்பி அனுப்பப்படுகின்ற அல்லது உரிய திகதியின் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் தொடர்பாக உத்தரவாதமளிக்கப்படமாட்டாது.

6. விண்ணப்பப்படிவத்துடன் கீழ் தரப்படும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்:-

* பிறப்புச் சான்றிதழ் ;
* தேசிய அடையாள அட்டை;
* கல்விச் சான்றிதழ்கள்;
* பிரதேச செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட நிரந்தர வதிவிடமுள்ள பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடம் தொடர்பான சான்றிதழ்;
* தொழிற் தகைமையைக் காட்டும் சான்றிதழ்கள் ;
* தொழில் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் ;
* அண்மைக்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப்பத்திரம்.

தலைவர்,
வெலிகம நகர சபை.

வெலிகம நகர சபை அலுவலகம்,
2015, மாச்சு 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெலிகம நகர சபையில் ..................... பதவிக்கான விண்ணப்பம்**

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.
   1.1 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. பிறந்த திகதி :----.
   ஆண்டு :---- மாதம் :----. திகதி :----.
4. விண்ணப்ப இறுதித் திகதியில் வயது :----.
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
5. தேசிய இனம் :----.
6. நீங்கள் இலங்கைப் பிரசையா ? :----.
7. கல்வித் தகைமை (க. பொ. த.) சாதாரண தரம் :----.
   சித்தி பெற்ற வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. (1) வேறு தகைமைகள் :----.
   (2) தொழிற் தகைமைகள் :----.
   (3) சேவை அனுபவம் :----.
   (4) சகல கல்விச் சான்றிதழ்கள் மற்றும் வேறு தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
10. நீர் எப்போதாவது குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேலே உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் என்பதையும் நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உடன்படுவேன் என்பதையும் நான் ஆளாவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ......................................................... இந்த நிறுவனத்தில் நிரந்தர/ சமயோசித/ பதில் அடிப்படையில் ................................. ஆக சேவை செய்கிறார் என உறுதிப்படுத்துகிறேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

4-716

---

**திவுலபிட்டிய பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்கள் நிரப்புதல்

திவுலபிட்டிய பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்ட, மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவும் தரமும் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 1. மின்சார ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III ) | 1 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600. | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |
| 2. சுகாதார ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III ) | 3 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600. | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |
| 3. வீதி ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III ) | 2 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600. | 5 ஆம் தரம்/6 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |

**பொதுத் தகைமைகள் :-**

1. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது உள்ளூராட்சி அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது.);
2. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
3. சிறந்த நடத்தையும் நல்ல தேக ஆரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்;
4. விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 3 ஆண்டு காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை** :- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்புகள் செய்யப்படும்.

**சேவையில் ஆட்சேர்ப்பதற்கான நிபந்தனைகள்**.-

1. இந்தப் பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியம் கொண்டதாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்துதல் வேண்டும்.
2. நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.
3. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்துடைய கட்டளைச் சட்டங்களுக்கும் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் திவுலபிட்டிய பிரதேச சபையினால் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை** : விண்ணப்பதாரர்கள் இங்கு காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து "செயலாளர், திவுலபிட்டிய பிரதேச சபை, தூனகஹ" எனும் முகவரிக்கும் 2015.05.12 ஆந் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் ஆரம்ப தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களின் துணைப்பிரதிகள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்:-

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. அடையாள அட்டையின் பிரதியொன்று;
4. கிராம அலுவலரின் சான்றிதழ் ;
5. விண்ணப்பிக்கும் பதவிக்குரிய கலை நிபுணத்துவம்/தேர்ச்சிச் சான்றிதழ் ;
6. இரண்டு நற்சாட்சிப்பத்திரங்கள் (அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டவை).

எச். எச். ஏ. டி. இந்திக அனுருத்த,
தவிசாளர்,
திவுலபிட்டிய பிரதேச சபை.

திவுலபிட்டிய பிரதேச சபை அலுவலகம்,
தூனகஹ,
2015, ஏப்பிறல் 07.

மாதிரி விண்ணப்பம்

**திவுலபிட்டிய பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் :----.

4. பிறந்த திகதி :-
   ஆண்டு :---- மாதம் :----. திகதி :----.
5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :-
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
6. பால் (ஆண் /பெண்) :----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
8. இலங்கைப் பிரசையானது பிறப்பாலா அல்லது பதிவு செய்யப்பட்டதன் மூலமா ? :----.
9. கல்வித் தகைமைகள் :- ----ஆண்டு பரீட்சை இலக்கம் :----.
10. ஏனைய தகைமைகள் :----.
11. தொழில் தகைமைகள் :----.
12. சேவை அனுபவம் :----.
13. தொலை பேசி இலக்கம் :----.

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் சரியானதும் என வெளிப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆட்சேர்ப்புக்கு முன்னதாக அல்லது பின்னர் தெரிய வந்தால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாமல் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----..

**ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ........................................................... தற்போது இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. ஆகச் சேவையாற்றுகின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்ததாக) உட்படவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------,
திணைக்கள/ நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

4-743

---

**பியகம பிரதேச சபை**

பியகமைப் பிரதேச சபையில் சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு**

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளப் பிரமாணம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| சுகாதார மேற்பார்வையாளர் III ஆம் தரம் | 1 | MN 1-2006 A ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 | க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி மற்றும் கணித பாடம் உட்பட இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (இதில் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) |

**அனுபவம்**.- உள்ளூராட்சி நிறுவனமொன்றில் பிஎல்-1 மற்றும் பிஎல் 2 சம்பள வகுதி இலக்கங்களின கீழ் சம்பளம் பெறும், சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட மற்றும் சேவைக் காலத்தில் ஐந்து (5) வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களாகவிருப்பதுடன் சேவைக்காலத்தினை நிறுவனத் தலைவர் எழுத்துமூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**உடற்தகுதிகள்**. - பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கான உடல் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனையவை**.- இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னதாக 2 வருடங்கள் தொடர்ச்சியாக மேல்மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராகயிருத்தல் வேண்டும். சிறந்த நல்லொழுக்கமுள்ளவராகவிருத்தல் வேண்டும்.

**வயது**.- குறைந்த எல்லை. தற்போது அரசசேவையில் இருப்பவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.
உச்ச எல்லை

**ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை

| பாடங்கள் | உச்சபுள்ளி அளவு | சித்தியடைய வேண்டிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| பொது விவேகமும் நுண்ணறிவும் | 100 | 40% |
| துறைரீதியான அறிவினைப் பரீட்சிக்கும் பரீட்சை | 100 | 40% |

**திறந்த ஆட்சேர்ப்பு**

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளப் பிரமாணம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| சுகாதார மேற்பார்வையாளர் III ஆம் தரம் | 01 | MN 1-2006 A ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 | க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி மற்றும் கணித பாடம் உட்பட இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலேனும் (பொது பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) |

**உடற்றகுதிகள்**.- பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கான உடல் உளத்தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனையவை**.- இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னதாக 3 வருடங்கள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராகவிருத்தல் வேண்டும். சிறந்த நல்லொழுக்கமுள்ளவராகவிருத்தல் வேண்டும்.

**வயது**.- குறைந்த எல்லை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் ஆகும்போது 18 வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

உச்ச எல்லை 30 வயதுக்குக் குறைந்தவராக இருக்க வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்தியடைய வேண்டிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| பொது விவேகமும் நுண்ணறிவும் | 100 | 40% |
| தற்கால சம்பவங்கள் பற்றிய பொது அறிவு | 100 | 40% |

### பியகம பிரதேச சபை

பியகம பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத வகுப்பு 2 சேவைத் தரத்திலே ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை<br>சம்பள வகுதி இலக்கம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 1. வருமானப் பரிசோதகர் | 4 | MN 1-2006 A சம்பள அளவு ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 ஆரம்ப சம்பள அளவு ரூபா 13,120 | (i) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் உட்பட வேறு ஆறு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். அத்துடன்<br>(ii) கல்விப் பொது தராதர உயர் தர பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திலாவது (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்திடையந்திருத்தல். |

**உடற்தகுதி**.- பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் மற்றும் மானசீக இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனையவை**.-
- (i) இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.
- (ii) விண்ணப்பம் கோரும் திகதியை அண்மித்த 3 வருடங்கள் தொடர்ந்து மேல்மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராகயிருத்தல் வேண்டும்.
- (iii) சிறந்த நல்லொழுக்கமுள்ளவராகவிருத்தல் வேண்டும்.
- (iv) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான குறைந்த பட்ச தகைமைகள் சகலதையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் தினத்திற்கு அத்தகைய தகைமைகளைச் சகல விதத்திலும் பூர்த்தி யெதிருத்தல் வேண்டும்.

**வயது**.- குறைந்தபட்சம் 18 வயதை அடைந்திருப்பதுடன் 30 வயதிற்கு மேற்படாதவராகவிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்தியடைய வேண்டிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| பொது விவேகமும் நுண்ணறிவும் | 100 | 10% |
| பொது அறிவு | 100 | 40% |

**குறிப்பு**.- எழுத்துமூலப்பரீட்சையில் அபேட்சகர்கள் புள்ளிகள் பெறும் திறன் ஒழுங்குமுறையினடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

*2.* **பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கையராக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமாகும் போது கடைசி 3 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவில் இருப்பவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சிறந்த நற்சான்றிதழ் உடையவராகவும், சிறந்த உடற் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதினைவிட அதிகமாகவும் இருத்தல் கூடாது;

(v) தற்பொழுது (அரச/மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர ஊழியர்கள் தொடர்பாக இந்த உச்ச வயதெல்லை செயல்வலுப் பெறாது ;

(vi) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகிய தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது;

(vii) பியகம பிரதேச சபையில் தற்பொழுது செயற்திட்ட/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்றவர்கள் தொடர்பாக முன்னுரிமை காட்டப்படும்.

*3.* நிரந்தர ஊழியர்கள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை அரச நிருவாக சுற்றறிக்கை 24/95 இன் நிபந்தனைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

*4.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்த பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியதுமாகும். விதவைகள்/அநாதைகள்/தபுதாரரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஊழியர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் பதவி உயர்வு செய்யப்படுகின்ற ஊழியர்கள் ஒருவருட வேலை பரீட்சிப்புக் கால எல்லைக்கு உட்பட்டதாகும்.

(iii) இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும் மேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணங்களுக்கும், கௌரவ ஆளுநரின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற வேறு நிபந்தனைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் உள்ளூராட்சிமன்றத்தினால் காலத்தறிகுக் காலம் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு இணைவாக செயற்படுவதற்கு உடன்படுதல் வேண்டும்.

*5.* **விண்ணப்பம் அனுப்பவேண்டியமுறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு இணைவாக 12" × 8" அளவிலான காகிதத்தில் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கையேற்கும் தினம் 2015.05.15 ஆந் தினத்திற்கு முன்னர் செயலாளர், பியகம பிரதேச சபை தெல்கொட என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கின்ற பதவினெ' என்று குறிப்பிடுதல் வேண்டும். (தற்பொழுது அரச/மாகாண அரச சேவையின் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்) உரிய தினத்திற்கு பிந்திக் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் மறுதலிக்கப்படும்.

*6.* விண்ணப்பப்படிவத்துடன் கீழ் உள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் மூலப்பிரதியினை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) வதிவினை உறுதிப்படுத்தும் வகையில் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் குறுங் மேலொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்) ;
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் ;
(v) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;
(vi) பியகம பிரதேச சபையில் தற்பெழுது செயற்திட்ட/ஒப்பந்தமாக சேவையாற்றுவாராயின் சேவைச் சான்றிதழ்;
(vii) ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று.

**குறிப்பு.-** இந்த வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்தல் அல்லது காலம் தாழ்த்துதல் அல்லது இரத்துச் செய்தல் போன்ற சகல அதிகாரம் பியகம பிரதேச சபையின் செயலாளருக்கு உரியதாகும்.

செயலாளர்,
பியகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகம,
2015, ஏப்பிறல் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பியகம பிரதேச சபை**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :----.
2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
3. தபால் முகவரி :----.
4. தொலைபேசி இல. :----.
5. பிறந்த திகதி :-
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இல. :----.
7. 2014 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் :----.
9. விவாக நிலை :----.
10. இனம் :----.
11. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாக? பதிவு செய்தமையினாலேயா? என்பது பற்றி :----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.
14. நீங்கள் தற்பொழுது பியகம பிரதேச சபையில் சேவையாற்றுபவராயின் :----.
    (i) தற்பொழுது வகிக்கின்ற பதவி :----.
    (ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
    (iii) அந்த நியமனத்தின் தன்மை (நிலையானது/அமயம்/தற்காலிகம்/தெரிவு/ஒப்பந்த/செயற்திட்ட அடிப்படையின் படி) :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது என்றும் மற்றும் சரியானது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பிழையானது அல்லது தவறானது என்று இந்தப் பதவிக்கு தெரிவு செய்து கொள்வதற்கு முன்னர் தெரியவந்தால் நான் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதுபோன்ற விடயமொன்று நிரூபிக்கப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது சேவையிலிருந்து பதவி நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

4-841

---

**தங்காலை நகர சபை**

தென் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

தங்காலை நகர சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக குறைந்தபட்சம் தகைமைகளையுடைய தென் மாகாணத்துக்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தற்போது தங்காலை நகர சபையில் அமைய, மாற்று, ஒப்பந்த, தற்காலிக, சலுகை அடிப்படையில் சேவையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | பதவி | : மேசன் (III ஆம் வகுப்பு) |
| | பதவிகளின் எண்ணிக்கை | : 1 |
| | சம்பளக் குறியீடு | : PL2/ 2006A |
| | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | : ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170 - ரூபா 18,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை) |
| | கல்வி, ஏனைய தகைமைகள் | : க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>மேசன் பதவிக்கு உரிய வகையில் இடைநிலை, தொழிற் கல்வி ஆணைக்குழு மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ள படி தேசிய தொழில் திறன் (N.V.Q.) குறைந்தபட்சம் 2ஆம் மட்ட தேர்ச்சியைப் பெற்றிருத்தல்<br><br>உரிய துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகும். |

| | | |
|---|---|---|
| 2. | பதவி | : சுகாதார தொழிலாளர் (III ஆம் வகுப்பு) (கடின அழுக்கு மத்திய நிலையம்) |
| | பதவிகளின் எண்ணிக்கை | : 3 |
| | சம்பளக் குறியீடு | : PL1/ 2006A |
| | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | : ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைகாண் தடை) |
| | கல்வி, ஏனைய தகைமைகள் | : 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**தேவையான ஏனைய தகைமைகளும் பொது நிபந்தனைகளும்.-**

(1) அரசாங்க அல்லது அரசாங்க கூட்டுத்தாபன சேவையிலிருந்து திறமையீனம் காரணமாக கட்டாய ஓய்வு வழங்கப்பட்டவராகவோ, சேவையிலிருந்து கீழிறக்கம் செய்வதற்குப் பதிலாக அனுதாப மாற்று வழியாக ஓய்வு வழங்கப்பட்டவராகவோ, ஒரு தண்டனை காரணமாக ஓய்வு வழங்கப்பட்டவராகவோ முறையான ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ, தனது பதவியை விட்டுச் சென்றவராகவோ இருத்தல் கூடாது ;

(2) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசுக்கு எதிராக செயற்படுத்தப்பட்ட குற்றவியல் தண்டனைக்கு நீதிமன்றமொன்றிலிருந்து குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;

(3) ஏதேனும் குற்றவியல் செயற்பாட்டின்போது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது குற்றவியல் வழக்குச் சட்டத்தின் 449 ஆவது சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றமொன்றில் நடைபெற்ற வழக்கொன்றில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;

(4) பொருட்கள் வங்குரோத்துக்குட்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;

(5) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(6) சிறந்த நடத்தையுடனும் சிறந்த உடற் சுகாதாரத்துடனும் இருத்தல் வேண்டும் ;

(7) 2015.05.07 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களுக்கு இவ்வுயர் மட்ட வயதெல்லை செல்லுபடியாகாது.)

(8) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குக் கிட்டிய 3 வருட காலம் தென் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவினராக இருத்தல் வேண்டும். (வதியும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் மூலம் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் பிரதேச செயலாளர் மூலம் அங்கீகரிக்கப்பட்டு வதிவை உறுதிப்படுத்த முடியும்) ;

(9) இந்த ஆட்சேர்ப்பு விண்ணப்பங்களை கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அதன் பின்னர் அல்லது இடையில் கைவிடுவதற்கு தங்காலை நகர சபைக்கு அதிகாரமுண்டு.

**விசேட தகைமைகள்-**

(1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு அண்மிய 3 ஆண்டு காலம் தங்காலை நகர சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவினராக இருத்தல் ;
